**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234 /2016**

**Deposition of P.W.** 11

Name : திரு. ஜோசப் சிறில்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது கொற்றிக்காடு காவல்நிலைய குற்ற எண். 220/2012 பிரிவுகள் 4 உ/இ 21(1) கனிமவள சட்ட படியும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடுக்கும் சட்ட படியான வழக்கில் காவல் ஆய்வாளர் திரு. கோடிலிங்கம் அவர்கள் முதல் விசாரணை செய்து ஒப்படைத்த வழக்கு கோப்பை நான் 15.12.2012ம் தேதி பார்வையிட்டு மேற்படி முதல் விசாரணை அதிகாரி வழக்கு சம்மந்தமான மாதிரி வரைபடம், மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளையும் மற்றும் புவியியல் மற்றும் கனிமவளத்துறை சாட்சிகளையும் விசாரணை செய்திருந்தார் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் ஆவணங்களின்

அடிப்படையில் இருந்ததால் நான் மேற்படி சாட்சிகள் யாரையும் மீண்டும் விசாரிக்கவில்லை. நான் சாட்சிகள் திரு. ராஜாராம், கோட்டாட்சிய்ா அருள்சத்தியா ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.07.2013ம் தேதி எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தை நான் சென்று பார்வையிடவில்லை. குறுவட்ட அளவையர் கொடுத்த அறிக்கையில் உள்ள சம்பவ இட அளவுகள் கணக்கிடப்பட்டு இழப்பு எவ்வளவு என்று கணக்கிடப்பட்டுள்ளது. அ.சா.5 நிலத்தை அளந்து அறிக்கை தயார் செய்தார் என்றால் சரிதான். சரியான முறையில் அறிக்கை கொடுக்கப்படவில்லை என்றும் நான் சரியான முறையில் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.